

feathers

104/37, Jawahar Nagar 4th Street
Thirumangalam, Madurai - 625706
Tamil Nadu, INDIA
https://feathers.org.in
feathers4change@gmail.com
+91 452 7968371 +91 94861 48212

# feathers

## Early Intervention Centre for Children with Developmental Delays



# இறகுகள்

## வளர்ச்சியில் பின்தங்கிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை சீரமைப்பு மையம்

# இறகுகள்

## வளர்ச்சியில் பின்தங்கிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை சீரமைப்பு மையம்

ஒவ்வொரு தாய்க்கும் தனது குழந்தையின் முதல் புன்னகை, முதல் வார்த்தை, முதல் தவழ்தல், முதல் நடை என அனைத்தும் ஆவலுடன் எதிர்பார்க்கும் அன்பான தருணங்கள். குழந்தை எதிர்பார்த்த மாதங்களில் இந்த அறிகுறிகளை வெளிப்படுத்தாதபோது, அது பெற்றோருக்கு கவலையை ஏற்படுத்தும். தலை நிற்றல், உருளுதல், தவழ்தல், நடத்தல், மற்றும் பேசுதல் போன்ற செயல்பாடுகள் அனைத்தும் குழந்தையின் வளர்ச்சியில் முக்கிய மைல்கற்களாகும். அதே நேரத்தில் ஒவ்வொரு குழந்தையும் அடையும் உடல் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி தனித்துவமானது. கிட்டதட்ட தொன்னூற்றைந்து சதவீதம் மூளையின் வளர்ச்சி குழந்தையின் ஐந்து வயதுக்குள்ளேயே முழுமை அடைந்து விடுகிறது. இக்காலகட்டத்தில் குழந்தையின் வளர்ச்சி முழுமையானதாக இருத்தல் வேண்டும். வளர்ச்சியில் பின்தங்கிய நிலை என்பது கீழ்காணும் வகைகளில் வெளிப்படலாம்.

**உடல் சார்ந்த வளர்ச்சி** (Physical Development)
குழந்தையின் தலை நிற்றல், உட்காருதல், தவழுதல், நடத்தல்



**தொடர்பு மேம்பாடு** (Communication Development)
பேசுதல், கவனித்தல



**அறிவாற்றல் வளர்ச்சி** (Cognitive Development)
செயலில் கவனம் செலுத்துதல் சிந்தித்து செயல்படுதல்



**சமூகத்துடன் ஒத்து வாழ்தல்** (Social Development)
பிற குழந்தைகளுடன் இணைந்து விளையாடுதல், பொருட்களை பகிர்தல்



**நடத்தை தகவமைப்பு** (Adaptive Behaviour)
சூழலுக்கு உகந்தவாறு செயல்படுதல்



**உணர்வுகளை கையாளுதல்** (Emotional Development)
அந்தந்த தருணத்திற்கு ஏற்றவாறு உணர்வுகளை கையாளுதல்



குழந்தையின் வளர்ச்சி படிநிலையில் ஏதேனும் பின்தங்கிய நிலை இருப்பின் அதனை உடனே உரிய வல்லுநர்கள் மூலம் கண்டறிந்து அதற்குரிய சீரமைப்பு பயிற்சிகளை உரிய காலத்தில் முறைப்படி அளிக்க வேண்டும். அவ்வாறு தாமதிக்காமல் ஆரம்ப நிலையிலேயே உரிய சிகிச்சை அளித்தால் குழந்தையின் வளர்ச்சியில் விரைவான முன்னேற்றம் காணலாம்.



## எமது ஆரம்பநிலை சீரமைப்பு மையத்தின் தனித்துவம்

- ❖ துறை சார்ந்த நிபுணர்களின் மூலம் நவீன பரிசோதனை முறைகளைக் கொண்டு வளர்ச்சிக் குறைபாடுகள் கண்டறியப்படும்
- ❖ பயிற்சி பெற்ற வல்லுனர்கள் மூலம நவீன உபகரணங்களைக் கொண்டு பிஸியோதெரப்பி (Physiotherapy), ஆக்குபேசனல் தெரப்பி (Occupational Therapy), பேச்சு பயிற்சி (Speech Therapy) போன்ற சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும்
- ❖ ஒவ்வொரு குழந்தைக்கும் தனி பயிற்சியாளர் மூலம் தனிக் கவனம் தரப்படும்
- ❖ கற்றலை எளிமையாக்க பிரத்தியேக கல்வி உபகரணங்களும், புலன்வழிக் கல்வி மூலம் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்
- ❖ குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தனிபட்ட முறையில் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்படும்



Physio Therapy - (பிசியோதெரபி)



Occupational Therapy - (தொழில்முறை பயிற்சி)



Speech Therapy - (பேச்சுப் பயிற்சி)



Sensory Integration - (புலன் வழி பயிற்சி)




Play Therapy - (விளையாட்டுப் பயிற்சி)



Brain Gym - (மூளை திறனூக்கப் பயிற்சி)